உத்தரவு போடப்பட்டிருக்கிறது. தாமதம் ஆனதுபற்றி என்னிடம் தகவல் இல்லை என்பதை கனம் அங்கதினர்க்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Opening of new Engineering Colleges

* 973 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கம் புதிதாய் நிறுவ இருக்கும் 20 இன்ஜினீரிங் காலேஜ்களில் நம் மாநிலத்திற்கு எத்தனை காலேஜ்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) அவற்றிற்கு மத்திய அரசாங்கம் அளிக்கும் உதவி என்ன ?

(இ) இதில் மாநில சர்க்காரின் பொறுப்பு என்ன ?

(ஈ) இந்தக் கல்லூரிகள் எங்கே அமைக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Government of India propose to start nine Engineering Colleges in all, but none of these is allotted to this State.

(*b*) *to* (*d*) Do not arise.

SRI A. VEDARATHNAM : இந்த காலேஜ்களில் இந்த ராஜ்யத்திற்கு ஒன்றுகூட ஒதுக்கப்படாததற்கு ஏதேனும் முக்கிய காரணம் உண்டா ? இங்கிருந்து அதற்கு போதுமான ஆதரவு அளிக்கப்பட்டால் இங்கே ஒரு காலேஜ் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ? அதை இங்கே ஆரம்பிப்பதற்கு நம்முடைய மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை தூண்டுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுமாதிரி யாராவது தனிப்பட்டவர்கள் முன்வருவார்களேயானால், அதுபற்றி பரிசீலனை செய்து பார்க்கிறோம். அதைப்பார்த்து இப்பொழுது இருக்கிற அளவுக்குமேல் அதிகமாக வேண்டியிருக்கிறதா என்பதையும் அனுசரித்துத்தான் ஒவ்வொரு வருஷமும் ஆரம்பிக்கவேண்டியிருக்கும். 1959-60-ம் ஆண்டைப் பொறுத்தவரைக்கும் புதியதாக என்ஜினீயரிங் காலேஜ் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இருக்காது. 1960–61-ல் கவனிக்கலாம்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : தஞ்சை புஷ்பம் கல்லூரியை என்ஜினீயரிங் கல்லூரியாக மாற்றுவதற்கு தனியார் துறையில் ஏதாவது மனுக்கள் வந்ததா? அப்படியானால் அது எப்பொழுது மாற்றப்படும் ? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரி மனு ஒன்றும் வரவில்லை.

SRI S. M. ANNAMALAI : நம் மாநிலத்தில் கல்லூரி ஆரம்பிப்பதற்கு தேவையே இல்லை என்று நம் மாநில சர்க்கார் விட்டுவிட்டார்களா ? அல்லது, இவர்கள் கேட்டு, மத்திய சர்க்கார் கொடுக்க மறுத்துவிட்டார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது இருக்கிற இன்ஜினீயரிங்கல்லூரிகள் இப்போதைக்கு போதும் என்பது சர்க்கார் கருத்து. 1960–61-ல் இன்னும் அதிகமாக ஆரம்பிக்கவேண்டுமா என்பது பற்றியும் ஆலோசிக்கவேண்டும். அதற்கு மத்தியில் 1959–60-ல் ஹையர் டெக்னலாஜிகல் இன்ஸ்டியூட் ஆரம்பிக்கப்படும். அங்கே முதல் ஆரம்பப்பட்டப் படிப்புக்காக ஆரம்பிக்கிறார்கள். அதில் 100 மாணவர்கள் புதியதாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

[24th March 1959

Sri A. VEDARATHNAM : தனியார் துறையில் இதற்கு உதவி வரவேண்டுமானால், எவ்வளவு அவர்களிடமிருந்து உதவியை அரசாங்கம் எதிர்பார்க்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது போட்டிருக்கிற திட்டப் பிரகாரம் என்ஜியரிங் கல்லூரி ஏற்படுத்துவதாக ஒப்புக்கொண்டால், மத்திய அரசாங்கம் ஒரு பாதி செலவையும், ராஜ்ய சர்க்கார் பாக்கி இருக்கிற பாதியில் கால் பகுதியும், இன்னொரு கால் பகுதி தனியாரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது ஒரு என்ஜினீயரிங் கல்லூரிக்கு சுமார் 50 லட்ச ரூபாயிலிருந்து 60 லட்ச ரூபாய் வரையில் செலவு ஆகலாம்.

Sri A. A. RASHEED : May I know whether the Government have taken into consideration the number of engineers that would be required to implement the schemes in the Third Five-Year Plan? Unless we start more Engineering Colleges this year, how are we to meet the requirement of qualified engineers for implementing the schemes under the Third Five-Year Plan?

The Hon. Sri C. SUBRAMANIAM : That has been kept in mind in starting engineering colleges. But my own view is that we should increase the number of politechnics.

Sri S. NAGARAJA MONIGAR : ஸார் இது விஷயமாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது இந்த வருஷம் அந்த மாதிரி தேவை ஒன்றும் தெரியவில்லை, அடுத்த வருஷம் அதைக் குறித்து யோசிக்கப் படும் என்பது போலச் சொன்னார்கள். நமது எதிர்காலத்தில் தேவைப் படும் என்ஜினீயர்களைப் பற்றிய நோக்கமானது 12 மாதங்களுக்குள்ளாக வளர்ந்து விடக் கூடிய அளவுக்கு அப்படி என்ன இருக்கிறது என்று விளக்குவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதற்குள்ளாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு ஓரளவுக்குத் தெரிந்து விடும்.

Control of filaria in the Kanyakumari District

* 974 *Q.*—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce a scheme to control filaria in the Kanyakumari District; and

(*b*) if so, what the cost of the scheme is?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri T. T. DANIEL : In view of the fact that this disease is prevailing in the district, will the Government think of introducing a State or all India scheme there, or at least make some provision in the anti-filaria scheme for the control of this disease?

The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, now the proposal is to survey the area and instructions have already been issued to take anti-filaria measures. But the national anti-filaria scheme is now tried as a pilot scheme in the four districts of Chingleput, Tanjore, South Arcot and North Arcot, and on the results of that pilot scheme, it will be considered whether it could be extended to the whole State.